செய்தி வெளியீடு எண்: 239 நாள்: 30.03.2020

## செய்தி வெளியீடு

தற்போது COVID–19 தொற்றுநோய் தடுப்பதற்கு 24.03.2020 முதல் 31.03.2020 வரையிலான தடையுத்தரவு அரசால் விதிக்கப்பட்டிருந்த காலத்தில் அரசின் அத்தியாவசிய பணிக்காக பல்வேறு துறைகளில் பணியாற்றிட ஆணை பிறப்பிக்கப்பட்டது. இத்துறைகளில் மாற்றுத்திறனாளி பணியாளர்களும் உள்ள நிலையில் அவர்களின் குறைபாடு மற்றும் பாதுகாப்பினை கருத்திற்கொண்டு இத்தடையுத்தரவு பிறப்பிக்கப்பட் காலங்களில் மாற்றுத்திறனாளிகள் அலுவலகத்தில் வருகை தந்து பணி மேற்கொள்ளுவதிலிருந்து விதி விலக்கு (EXCEMPTION) வழங்க மாற்றுத்திறனாளி சங்கங்கள் கோரிக்கை விடுத்தனர். அரசு அவர்களின் கோரிக்கையினை பரிசீலனை செய்து அவர்களை தடை யுத்தரவு காலங்களில் பணியில் இருப்பதாக கருதி அனுமதி வழங்க 24.03.2020 அன்று நடைபெற்ற அனைத்து துறை செயலாளர்கள் கூட்டத்தில், தலைமை செயலாளர் அவர்கள் இசைவு தெரிவித்துள்ளதையொட்டி, இத்தடை காலத்தில் அத்தியாவசிய பணிகளில் ஈடுபடும் துறைகள் சார்ந்த அலுவலகங்களில் பணிபுரியும் மாற்றுத்திறனாளிகள் அலுவலக பணியிலிருந்து விலக்கு அளிக்கப்படுகிறார்கள் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

மாற்றுத்திறனாளிகள் குறிப்பாக கடுமையாக பாதிக்கப்பட்ட மாற்றுத்திறனாளிகள், மனவளர்சி குன்றியோர், தசை சிதைவு நோயால் பாதிக்கப்பட்டோர், தொழுநோயாளிகள் பராமரிப்பு உதவித்தொகையாக ஒவ்வொரு மாதமும் ரூ.1500/–மாற்றுத்திறனாளிகள் நலத்துறை மூலம் வழங்கப்பட்டு வருகிறது. இவ்வுதவித்தொகை மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர்கள் மூலம் பயனாளிகளின் வங்கி கணக்கிற்கு மாத இறுதியில் சென்றடையும் வகையில் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தற்போது கொரோனா வைரஸ் பரவுவதை

தடுக்கும் நடவடிக்கையாக **24.03.2020** –லிருந்து தடையுத்தரவு மேற்கொள்ளப்பட்டு வருகின்ற, இக்காலத்தில் மக்களின் வாழ்வாதாரம் பாதிக்காத வகையில் அரசு விடுத்துள்ள பல்வேறு சலுகைகளில் ஒன்றாக தற்போது வழங்கப்படும் பராமரிப்பு உதவித்தொகையினை இரண்டு மாதம் முன்னதாக வழங்கப்படும் என தெரிவித்துக்கொள்ளப் படுகிறது. இதற்கான ஏற்பாட்டினை உரிய மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர்கள் மேற்கொள்ளுவார்கள்.

மாற்றுத்திறனாளிகளுக்கான மாநில ஆணையர்
(ம) இயக்குனர் மாற்றுத்திறனாளிகள் நலன்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**